**செய்தி வெளியீடு எண்: 507** **நாள்: 17.08.2019**

<u>செய்தி வெளியீடு</u>

# "முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் 19.8.2019 அன்று துவக்கி வைக்கிறார்கள்.

மக்களின் குறைகளை நகரங்கள் மற்றும் கிராமங்கள் தோறும் சென்று நிவர்த்தி செய்யும் **முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தை** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் **19.8.2019** அன்று சேலம் மாவட்டத்தில் துவக்கி வைக்க உள்ளார்கள். அத்துடன் பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளையும் வழங்க உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் **18.7.2019** அன்று சட்டப்பேரவை விதி எண் **110**–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகின்றது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டமும், ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் வட்டாட்சியர் தலைமையில் அம்மா திட்ட முகாம்களும் நடத்தப்படுகிறது. விவசாயிகள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான குறைகளை தீர்வு காண்பதற்கான சிறப்பு குறை தீர்வு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு எடுத்துவரும் இத்தகைய முயற்சிகளுக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் **முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டம்** என்ற ஒரு சிறப்பு குறைதீர்க்கும் திட்டம் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும் என்றும், இதன்மூலம் நகரங்களில் வார்டுகளிலும், கிராமங்கள் தோறும் நேரடியாக சென்று மனுக்களை பெற்று, தீர்வு காண, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்கள்.

இத்திட்டத்தின் மூலம், அனைத்து நகர்புற வார்டுகளிலும், கிராமங்களிலும் உரிய விளம்பரத்திற்கு பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவுப்படி ஒரு குறிப்பிட்ட நாளில் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகர்புற வளர்ச்சித் துறை மற்றும் பிற

துறைகளைச் சார்ந்த ஒரு அலுவலர் குழு, ஆகஸ்ட் மாத இறுதிக்குள் சென்று மனுக்களைப் பெறுவார்கள். **இம்மனுக்கள் அனைத்தும் கணினியில் பதியப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைக்கு ஒரு வார காலத்திற்குள் அனுப்பப்படும். அம்மனுக்கள் மீது ஒரு மாத காலத்திற்குள் தீர்வு எட்டப்படும்.**

மேற்குறிப்பிட்ட மனுக்களின் மீதான தீர்விற்குப் பின், செப்டம்பர் மாதத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் வட்ட அளவிலான விழாக்கள் நடத்தப்படும். பல்வேறு நலத் திட்டப் பயன்களை இவ்விழாவில் வழங்குவதோடு, மக்களின் அடிப்படைத் தேவைகளான சாலைகள், தெரு விளக்குகள், மருத்துவம், சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை தேவைகளுக்கும் இவ்விழாவின் போது தீர்வு காணப்படும். **மக்களின் குறைகளுக்கு தீர்வு காணும் தமிழ்நாடு அரசின் முக்கிய சிறப்புத் திட்டமாக இத்திட்டம் திகழும்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், கீழ்கண்ட அட்டவணைப்படி, சேலம் மாவட்டத்தில் மக்களிடமிருந்து மனுக்களை பெறுவதோடு, அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கிட உள்ளார்கள்.

| நாள் | நேரம் | இடம் |
| --- | --- | --- |
| 19.8.2019 | காலை 9.30 மணி | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், வனவாசி, நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் |
| | காலை 11 மணி | ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், எடப்பாடி |
| | பிற்பகல் 2 மணி | ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், கொங்கணாபுரம் |
| 20.8.2019 | காலை 9.30 மணி | ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், தலைவாசல் |
| | காலை 11 மணி | ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், ஆத்தூர் |
| | பிற்பகல் 2.30 மணி | சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க வளாகம், வாழப்பாடி |

.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**